# சிவாலய வழிபாட்டு முறை

சிவாலயத்துக்குச் சென்று வழிபாடுகிறவர்கள் தம்முடைய உடம்பையும் உள்ளத்தையும் துய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். ஸ்நானம் செய்து விபூதி அணிந்து ருத்திராக்ஷம் பூண்ட சிவபக்த வேஷம் பெற்றுத் தமக்குரிய அநுஷ்டானங்களை முடித்துக்கொள்ள வேண்டும். பூஜைக்குரிய பூ, பழம், தாம்பூலம் ஆகியவற்றுடன் ஆலய வாயிலை அடைந்து, கால் கைகளைச் சுத்திசெய்து கொண்டு உள்ளே செல்ல வேண்டும்.

துவஜஸ்தம்பத்தின் அடியில் உள்ள கணபதிக்கு முன் சென்று இரண்டு கைகளையும் முஷ்டியாகக்கொண்டு சிரசில் ஐந்து முறை குட்டிகொண்டு இரு கரங்களாலும் இரண்டு காதுகளையும் மாறாகப் பற்றித் தோப்புக்கரணம் போட்டு, மும்முறை மண்டியிட்டு வணங்கி ஸ்தோத்திரங்களைக் கூறி வழிபட வேண்டும். கணபதி வழிபாட்டை முடித்தபிறகு அவ்விடத்திலேயே மூல லிங்கத்துக்குரிய அஷ்டாங்க நமஸ்காரத்தை முறைப்படி செய்யவேண்டும். கோபுரம் முதல் இந்த இடம் வரையில் பாதஸ்தானம்; ஆதலின் இது நமஸ்காரத்துக்குரிய இடம். அதன் மேலுள்ள உறுப்புகள் நமஸ்காரத்திற்குரியனவாகா என்று கூறுவர். மேலும், உள்ளே சென்று தனித்தனியே ஒவ்வொரு மூர்த்தியையும்

நமஸ்கரித்தால் பின் புறமுள்ள மூர்த்திக்கு கால் நீட்ட நேருமாதலின் அது விலக்கத் தக்கது.

இதன்பின்பு, பிராகாரங்களில் வலமாகச் சென்று உள்ளே புகுந்து துவாரபாலகர்களையும், உட்புறமுள்ள அதிகார நந்தியாகிய சேனைத்தலைவரையும் வணங்கி விடைபெற்று உள்ளுக்குள் செல்ல வேண்டும்.

பிரதக்ஷிணம் செய்யும்போது பூர்ண கர்ப்பம் தரித்தவள் எண்ணெய்க் குடத்தைத் தாங்கி நடக்கும்போது எப்படிச் செல்வாளோ, அப்படி மெல்லச் செல்ல வேண்டும். மனம் சிவத்தியானத்திலும், வாக்கு ஸ்தோத்திரத்திலும், கண்கள் மூர்த்தி தரிசனத்திலும், செவிகள் சிவ சரிதப் பாடல்களைக் கேட்பதிலுமாக இந்திரியங்களைச் சிவனிடத்தே நாட்டமுறச் செய்து, கைகளைச் சிரமேல் கூப்பிய படியே வலம் வரவேண்டும்.

இவ்வாறு உட்பிராகாரம் சென்று ஸோமாஸ்கந்தர் முதலிய மூர்த்திகளை முறையே வணங்கி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சந்நிதியை அடைந்து அங்கே அமர்ந்து பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபிக்க வேண்டும். 108 முறை ஜபிக்க வேண்டும். குறைந்த பக்ஷம் பத்து முறையேனும் ஜபிக்க வேண்டும். ஜபம் முடிந்து எழுந்து வணங்கிய பின், கணபதி, முருகன் முதலான மூர்த்திகளையும் நடராஜரையும்

வணங்கிப் பிறகு அர்த்த மண்டப வாயிலை அடைய வேண்டும். இவ்வாறு அன்றி வலம் வராமலே நேரே உட்செல்லுதலும், நந்திக்கும் லிங்கத்துக்கும் இடையே குறுக்காகச் செல்லுதலும் முறையல்ல. பிராகாரங்கள் கைகளைப் போன்றவையாதலின், குழந்தைகளைக் கைகளால் தழுவி முகத்தோடு முகம் வைத்துப் பெரியவர்கள் முத்தமிடும் முறைபோல, பிராகார வலத்தின் பின்பே உள்ளே நுழைந்து தரிசனம் செய்ய வேண்டும்.

ஆலய வழிபாடு செய்கிறவர்கள் வெறுங்கையுடன் செல்லலாகாது. தேங்காய், பழம் முதலியவற்றுடன் போகவேண்டும். இறைவனுடைய பூஜையில் தேங்காய் சிறப்பாக இருப்பதற்குத் தக்க காரணம் உண்டு. கும்ப ரூபத்தில் தெய்வத்தை வைத்து ஆராதிக்கும்போது, அவருடைய சிரஸாகத் தேங்காயை வைத்துப் பூஜிப்பதைப் பார்க்கிறோம். தேங்காய்க்குச் சிவபெருமானைப் போல மூன்று கண்கள் இருக்கின்றன. அது மட்டுமா? தேங்காயில் மூன்று கோடுகள் இருக்கின்றன. அவை விஷ்ணுவுக்குரிய நாமத்தை நினைப்பூட்டுகின்றன. இவற்றால் சிவ விஷ்ணு ஆராதனையில் தேங்காய் வேறுபாடின்றிச் சிறப்பை அடைந்திருக்கிறது. தொன்றுதொட்டுச் சைவ வைஷ்ணவ வழிபாட்டில் ஒற்றுமை இருப்பதனையும் இது புலப்படுத்துகிறது.

நிவேதனம் செய்யும்போது தேங்காயை உடைத்து வைப்பதும் ஒரு சிறந்த உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. தேங்காயின் மேல் கடினமான ஓடும், அதனுள்ளே வெண்மையான பருப்பாகிய காய்ப்பகுதியும், அதனுள்ளே இனிய இளநீரும் இருக்கின்றன. உருண்டையான புற ஓடு பிரபஞ்சத்தை ஒத்திருக்கிறது. இரண்டும் கோள வடிவம் உடையன. அது உலக மாயையைக் குறிப்பது. உள்ளே உள்ள வெண்ணிறமான பகுதி பரமாத்மாவைக் குறிக்கிறது. இளநீர் அதனால் விளையும் பரமானந்த அமிர்தத்தை ஒத்திருக்கிறது. ஜீவாத்மா மாயையினால் பரமாத்மாவை உணராமல் பரமானந்தப் பிராப்தியும் பெறாமல் நிற்கிறது. அது போல வெள்ளைப் பகுதியையும் இளநீரையும் காணமுடியாமல் ஒடு மறைக்கிறது. சிவ சந்நிதியில் பூஜகர் தேங்காயை உடைக்கும்போது அதன் உள்ளே இருப்பவை தெரிகின்றன. ஆசாரியன் சிவஸந்நிதியில் மாயையை அகற்றிச் சிவபெருமானது தேஜோமய ஸ்வரூபத்தைக் காட்டி அவனருளால் பரமானந்தப் பேரமுதத்தை நுகரச் செய்யும் செயலையே இது காட்டுகிறது. இவ்வளவு உட்கருத்துக்களையும் உடையதாக இருப்பதனால் தேங்காயை ஆலய வழிபாட்டில் மிகவும் முக்கியமானதாக வைத்திருக்கிறார்கள். அது எல்லாக் காலத்திலும் கிடைக்கும்.

வாழைப்பழம் முதலிய பழங்கள் நம் வேண்டுகோளின் ஸபலத்தன்மையையும், தாம்பூலம் லக்ஷ்மீ கடாக்ஷத்தையும் காட்டும். தூபம், நம் பாவம் புகையுருவமாகப் பறந்து போவதைக் காட்டும். கர்ப்பூர ஹாரத்தி பரஞ்சோதி ஸ்வரூப தரிசனத்தைப் புலப்படுத்தும்.

இவ்வாறு சிவ தரிசனத்தை முறைப்படி முடிந்த பிறகு சண்டிகேசுவரர் சந்நிதியை அடைந்து வணங்கிச் சிவதரிசன பலம் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டு வெளியே வரவேண்டும். பெரிய நந்தியின் பின் இருந்து ஓம் ஹர என மும்முறை கூறிப் பின் அம்பிகையின் ஆலயம் செல்ல வேண்டும்.

சிவாலயத்திற்குச் சொல்லியவாறே அம்பிகையின் ஆலயத்திலும் துவஜஸ்தம்பத்தின் அடியில் நமஸ்காரம் செய்து பிராகாரத்தை வலமாக வந்து உட்சென்று, துவார சக்திகளை வணங்கி விடைகொண்டு, அம்பிகையின் ஸந்நிதியை அணுகி ஸ்தோத்திரம் முதலியவற்றால் வழிபட்டு வணங்க வேண்டும். பின் சன்டேசுவரியை வணங்கித் தேவி தரிசனம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டும்.

பிறகு சிவாலயம் சென்று கடைசியாகப் பைரவரை வணங்கி, சிவாரியரிடம் விபூதிப் பிரஸாதம் பெற்று அணிந்து,

ஜங்கமலிங்கஸ்வரூபமான அவரையும் வணங்கி விடைபெற்று, இறைவனுக்கும் புறம் காட்டாமல் வெளியே வரவேண்டும்.

இந்த வழ்பாட்டு முறை பஞ்சப் பிராகாரம் உள்ள பெரிய க்ஷேத்திரங்களுக்கே ஏற்றதாகும். ஆகவே சிறிய ஆலயங்களுக்குத் தக்கவாறு இம்முறையையே சுருக்கமாகப் பின்பற்றி வழிபடல் வேண்டும்.

நமஸ்காரங்கள் அஷ்டாங்கம், பஞ்சாங்கம், த்ரியங்கம் முதலிய பல வகைப்படும். அஷ்டாங்கம் என்பது இரண்டு கால்கள், இரண்டு கைகள், இரண்டு தோள்கள், மார்பு, நெற்றி ஆகியவை நிலத்தில் படிய வணங்குவது. பஞ்சாங்கம் என்பது இரண்டு கால்கள், இரண்டு கைகள், நெற்றி ஆகியவை தரையில் படிய வணங்குவது. த்ரியங்கம், இரண்டு கைகளையும் சிரசின்மேல் குவித்துத் தலைவணங்குவது. அஷ்டாங்க நமஸ்காரத்தைத் துவஜஸ்தம்பத்தின் அடியில் மட்டுமே செய்ய வேண்டும். மூர்த்திகளின் சந்நிதியில் த்ரியங்க நமஸ்காரமே செய்ய வேண்டும்.

ஆலய வழிபாட்டை நாள்தோறும் ஒரு முறையாவது யாவரும் செய்ய வேண்டும். ஆத்மார்த்த பூஜையை வீட்டில் இருந்து புரிவோருக்கும் ஆலய வழிபாட்டை நித்திய கர்மாநுஷ்டானங்களில் ஒன்றாக ஆகமங்கள் விதித்திருக்கின்றன.